# காரமடை நகராட்சி

**2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (08.11.2023) 08–ஆம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விவரம்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | நகர்மன்ற பெருள் வரிசை எண் மற்றும் பொருள் விவரம் | தீர்மானம் எண் / தீர்மான விவரம் |
|---|---|---|
| 08.11.2023 | **<u>பொருள்: 01</u>**<br>காரமடை நகராட்சி ஆணையாளரது செப்டம்பர்–2023 மற்றும் அக்டோபர்–2023 ஆம் மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1879/2021/இ1) | தீர்மானம் எண்.605<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 02</u>**<br>காரமடை நகராட்சியில் SUIDF திட்டத்தின் கீழ் வார்டு எண்.01 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் ஏற்கனவே உள்ள குழல் விளக்கு, சோடியம் விளக்கு போன்றவற்றை LED விளக்குகளாக மாற்றும் பணியை 1.06 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை TUFIDCO நிறுவனத்திடம் கடனாக பெற்று பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2155/2022/இ1) | தீர்மானம் எண்.606<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 03</u>**<br>மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சியில் தமிழ்நாடு அரசின் காலை சிற்றுண்டி திட்டம் விழிப்புணர்வு விளம்பர பணியில் மற்றும் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர விளம்பரப் பதாகைகள் அமைத்து காட்சிப்படுத்தியதற்கான மொத்த பட்டியல் ரூ.35518/– ஐ ஷாப்னிக் என்டர்பிரைஸ், | தீர்மானம் எண்.607<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கோயம்புத்தூர் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1992/2023/அ1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 04</u>**<br>காரமடை நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள், தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஓட்டுநர் ஆகியோருக்கு 2023 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கிடவும், தூய்மைப் பணியாளர்களுக்கு காலணிகள் கதர் ஸ்டோர் நிறுவனத்திடம் வாங்கிடவும் தையல்கூலி வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3327/2023/எச்1) | தீர்மானம் எண்.608<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 05</u>**<br>20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 29.02.2024 வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.118, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (ந.வ.4(1)), நாள்.04.09.2023–இன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3280/2023/எப்1) | தீர்மானம் எண்.609<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 08.11.2023 | **<u>பொருள்: 06</u>**<br>காரமடை நகராட்சியில் 2023–24 ஆம் ஆண்டு வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் பணியினை துரிதப்படுத்தும் பொருட்டு ஒலிப்பெருக்கி மற்றும் குறுஞ்செய்தி மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 03.10.2023 அன்று நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி சொத்துவரி 2023–24 இரண்டாம் அரையாண்டிற்கான வரியினை 31.10.2023–க்குள் செலுத்தி ஊக்கத் தொகை பெற்றுக்கொள்ளுமாறு வரிவிதிப்புதாரர்கள் அலைபேசிக்கு குறுஞ்செய்தி (Bulk Message) அனுப்பப்பட்டது. மேலும் குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் D & O தொழில் உரிமக் கட்டணம் ஆகியவற்றை செலுத்த ஒலிப்பெருக்கு மூலம் விளம்பரப்படுத்த 05.10.2023 முதல் 31.10.2023 வரை, நவம்பர், டிசம்பர்–2023, ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் –2024 ஆகிய மாதங்களிலும் விளம்பரப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.897/2022/அ1) | தீர்மானம் எண்.610<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 07</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.06–னை 01.10.2020 முதல் 30.09.2023 வரை மூன்றாண்டு காலத்திற்கு திருமதி.புஷ்பவள்ளி, க/பெ.ஜெகநாதன் என்பவருக்கு குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டு 30.09.2023 வரை கடையினை நடத்தி வந்துள்ளனர். தற்போது மூன்றாண்டுகள் முடிவுற்ற நிலையில் மேற்படி கடையில் வியாபாரம் சரியாக இல்லையெனவும், கடையினை நடத்த இயலாததால் இந்நகராட்சி வசம் 30.09.2023–ஆம் நாள் திரும்ப ஒப்படைத்துள்ளனர். எனவே மேற்படி கடை எண்.06–யை ஏலம் கோரி புதிதாக குத்தகைதாரருக்கு ஒப்படைக்கவும், பழைய குத்தகைதாரர் திருமதி.புஷ்பவள்ளி, க/பெ.ஜெகநாதன் அவர்கள் இந்நகராட்சியில் செலுத்தியுள்ள முன் வைப்பு தொகை மற்றும் கூடுதல் முன் வைப்புத் தொகை ஆகியவற்றினை திரும்ப குத்தகைதாரர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.611<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3375/2023/அ1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 08</u>**<br>காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் 1 முதல் 5 வரை உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 25.08.2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் உணவுகளை எடுத்துச் செல்லும் வாகனத்தில் இரண்டு புறமும் புகைப்படத்துடன் கூடிய பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது மற்றும் 7 பள்ளிகளில் புகைப்படத்துடன் கூடிய பெயர் பலகை வைக்கப்பட்டது. எனவே மேற்கண்ட பணிக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.80,200/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1179/2023/இ1) | தீர்மானம் எண்.612<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 09</u>**<br>இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநயோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் குளோரின் லிக்விட் சிலிண்டர் ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் கொள்முதல் செய்வதற்கும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.130/2022/பி1) | தீர்மானம் எண்.613<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 10</u>**<br>இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் தனிக்குடிநீர் திட்டத்தில் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தரம் குறித்து தலைமை நீர் பகுப்பாய்வாளர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை அலுவலகம், கோயம்புத்தூர் அலுவலகத்தில் பகுப்பாய்வு செய்து பரிசோதனை சான்று பெறவும், அதற்கு ஒரு ஆண்டிற்கு ஆகும் செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.614<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2601/2022/பி1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 11</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் புதிதாக தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் புதிதாக மின் கம்பம் அமைத்தல் போன்ற பணிகளுக்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழக அலுவலகங்களுக்கு மதிப்பீட்டு கட்டணம் செலுத்தவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.601/2023/பி1) | தீர்மானம் எண்.615<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 12</u>**<br>காரமடை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் மக்கும் குப்பைகள் மற்றும் கழிவுகள் குவியல் முறையில் உரமாக்கப்பட்டு வருகிறது. தற்போது SBM 2.0 திட்டத்தின் கீழ் 2 நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் மற்றும் 1 வளமீட்பு மையம் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணியை மேற்கொள்வதற்கு போதிய அளவு தண்ணீர் வசதி இல்லை. எனவே உரமாக்கும் மையங்களுக்கும், கழிப்பறைகளுக்கும் தேவையான தண்ணீர் வழங்குவதற்கு ஒரு குழாய் கிணறு மற்றும் மோட்டார் அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3905/2023/இ1) | தீர்மானம் எண்.616<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 13</u>**<br>காரமடை நகராட்சியில் உள்ள பகுதிகளில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் முதலியன நகராட்சி பதிவேட்டில் முழுமையாக இடம் பெறாமல் உள்ளது. இதனால் சாலைகள் அமைக்க இயலாமல் உள்ளது. ஏற்கனவே பேரூராட்சியாக இருந்தபோது தயார் செய்யப்பட்ட பதிவேட்டின் அடிப்படையாக | தீர்மானம் எண்.617<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>இருப்பதால் புதிய சாலை அமைப்பது இயலாமல் உள்ளது. இதனை சரிசெய்ய நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கோரிக்கை வைத்ததை தொடர்ந்து சாலைகளை மறு அளவீடு செய்து விடுபட்ட சாலைகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க உத்தேச ரூ.7.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>M/s. DB இன்போ சொலிசன், சென்னை</td><td>3500/- ஒரு கிலோ மீட்டருக்கு</td></tr>
<tr><td>2</td><td>M/s. AMS சாப்ட் சொலிசன், ஈரோடு</td><td>3600/- ஒரு கிலோ மீட்டருக்கு</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகள் அளித்துள்ள M/s. DB இன்போ சொலிசன், சென்னை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.<br>
அலுவலக குறிப்பு :<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.3906/2023/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.11.2023</td>
<td><u>பொருள்: 14</u><br>
காரமடை நகராட்சி 19.83 ச.கி.மீ பரப்பளவு கொண்டதாகும். மக்கள் தொகை சுமார் 43527 ஆகும். இந்நகராட்சியில் மொத்த சாலைகளின் நீளம் 142 கி.மீ ஆகும். இந்தப் பகுதியில் 2570 தெரு மின்விளக்குகள் அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தற்பொழுது நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று மின்விளக்குகள் இல்லாத கம்பங்களுக்கு 95 புதிய மின்விளக்குகள் அமைக்கவும் ஏற்கனவே நகரில் 475 LED விளக்குகள் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. அதில் தற்போது வரை பழுதடைந்த LED விளக்குகளை மாற்றவும் 30W LED பல்பு 150 எண்களும், 40W LED பல்பு 50 எண்களும் மேலும் அலுவலக முகப்பு விளக்கு 4 எண்களும் மற்றும் உதிரிபாகங்கள் வாங்கி பொருத்துவதற்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.618<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு :<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3685/2023/இ1)</td><td></td></tr>
<tr><td>08.11.2023</td><td><u>பொருள்: 15</u><br>காரமடை நகராட்சி அனைத்து பகுதிகளிலும் மழைநீர் வடிகால் இல்லை. புதிய மழைநீர் வடிகால் மூலதன மானியத் திட்டம் (CGF) மூலம் அமைக்க கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சம்)</th></tr>
<tr><td>1</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 மற்றும் 3–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>100.00</td></tr>
<tr><td>2</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 மற்றும் 6–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>91.00</td></tr>
<tr><td>3</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 மற்றும் 8–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>100.00</td></tr>
<tr><td>4</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>60.00</td></tr>
<tr><td>5</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>70.00</td></tr>
<tr><td>6</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 மற்றும் 9–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>93.00</td></tr>
<tr><td>7</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>60.00</td></tr>
<tr><td>8</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>81.00</td></tr>
<tr><td>9</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–இல் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>55.00</td></tr>
</table></td><td>தீர்மானம் எண்.619 திருத்திய மதிப்பீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 10 | காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 மற்றும் 15–இல் மழைநீர் வடிகால் கட்டுதல். | 92.00 |
| 11 | காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 மற்றும் 17–இல் மழைநீர் வடிகால் கட்டுதல். | 100.00 |
| 12 | காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, 19 மற்றும் 20–இல் மழைநீர் வடிகால் கட்டுதல். | 85.00 |
| 13 | காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, 23, 24, 25, 26 மற்றும் 27–இல் மழைநீர் வடிகால் கட்டுதல். | 100.00 |
| | **மொத்தம்** | **1087.00** |

**அலுவலக குறிப்பு :**

அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3341/2023/இ1)

08.11.2023

**<u>பொருள்: 16</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பள்ளிகளில் உள்ள 6 ஓட்டு கட்டிடங்களை இடித்து அகற்றுவதற்கு மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்பபடுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | கட்டிடங்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | துவக்கப்பள்ளி, குளத்துப்பாளையம் | 1 | 1.20 |
| 2 | துவக்கப்பள்ளி, பெரியதொட்டிபாளையம் | 1 | 1.20 |
| 3 | துவக்கப்பள்ளி, ஆயர்பாடி | 1 | 1.20 |
| 4 | துவக்கப்பள்ளி, திம்மண்ணகவுண்டன் புதூர் | 1 | 1.20 |
| 5 | நடுநிலைப்பள்ளி, மங்கலக்கரைப்புதூர் | 2 | 2.40 |
| | **மொத்தம்** | | **7.20** |

தீர்மானம் எண்.620
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3341/2023/இ1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 17</u>**<br>மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை கடிதத்தின்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு வழங்கும் திட்டம் 25.08.2023 முதல் ஊரக பகுதிகள் மற்றும் நகராட்சிகளில் விரிவுபடுத்தப்படவுள்ளதால் இத்திட்டத்திற்கு தேவையான மாணவர்கள் காலை உணவிற்கு தேவையான தட்டுகள், டம்ளர்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் உள்ள அரசுப்பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு 600 தட்டுகள் மற்றும் 600 டம்ளர்கள் கொள்முதல் செய்தமைக்கான தொகை ரூ.107520/-ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1179/2023/இ1) | தீர்மானம் எண்.621<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 18</u>**<br>இந்நகராட்சியில் 2023-2024 ஆம் ஆண்டு 6வது மாநில நிதிக்குழு திட்டத்தில் பள்ளி கட்டிடங்கள் மேம்பாடு திட்டத்தில் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ள திட்டப்பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUFIDCO) மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் ஆகிய அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கருத்துரு புத்தகம் தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.27000/- ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1) நகராட்சி நடுநிலைப்பள்ளி, காரமடை (வடக்கு புறம்)<br>2) நகராட்சி நடுநிலைப்பள்ளி, காரமடை (தெற்கு புறம்)<br>3) நகராட்சி நடுநிலைப்பள்ளி, காரமடை (மேற்கு புறம்) | தீர்மானம் எண்.622<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3907/2023/இ1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 19</u>**<br>இந்நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு 6வது மாநில நிதிக்குழு திட்டத்தில் பள்ளி கட்டிடங்கள் மேம்பாடு திட்டத்தில் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ள திட்டப்பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUFIDCO) மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் ஆகிய அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கருத்துரு புத்தகம் தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.27000/– ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) நகராட்சி ஆரம்பப்பள்ளி, பெரியதொட்டிபாளையம்<br>2) நகராட்சி ஆரம்பப்பள்ளி, ஆயர்பாடி<br>3) நகராட்சி ஆரம்பப்பள்ளி, திம்மண்ணகவுண்டன்புதூர்<br><br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3907/2023/இ1) | தீர்மானம் எண்.623<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 20</u>**<br>இந்நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு 6வது மாநில நிதிக்குழு திட்டத்தில் பள்ளி கட்டிடங்கள் மேம்பாடு திட்டத்தில் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ள திட்டப்பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUFIDCO) மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் ஆகிய அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கருத்துரு புத்தகம் தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.27000/– ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) நகராட்சி ஆரம்பப்பள்ளி, குளத்துப்பாளையம் (சாஸ்திரி நகர்)<br>2) நகராட்சி நடுநிலைப்பள்ளி, மங்கலக்கரைப்புதூர் | தீர்மானம் எண்.624<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3) நகராட்சி நடுநிலைப்பள்ளி, மங்கலக்கரைப்புதூர் (வடக்கு புறம்)<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3907/2023/இ1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 21</u>**<br>இந்நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம், அம்ரூத் 2.0 மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களில் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் மற்றும் 6வது மாநில நிதிக்குழு திட்டத்தில் பள்ளி கட்டிடங்கள் மேம்பாடு திட்டத்தில் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ள திட்டப்பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUFIDCO) மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் ஆகிய அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கருத்துரு புத்தகம் தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.29000/– ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3907/2023/இ1) | தீர்மானம் எண்.625<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 22</u>**<br>காரமடை நகராட்சியானது தரம் உயர்த்தப்பட்டு இரண்டாம் நிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டு அரசாணை பெறப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறையின்படி இந்நகராட்சிக்கு ஒரு தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி உத்திரவின்படி தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதாலும் இவ்வலுவலகத்தின் அனைத்து பிரிவுகளின் கோப்புகள் மற்றும் அறிக்கை விவரங்கள் தட்டச்சு செய்து நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் இதர அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக கணினி தட்டச்சு பணி தெரிந்த (B.Sc., Computer Science) படித்த ஒரு நபரை 01.11.2023 முதல் தற்காலிகமாக பணியமர்த்தவும் அவருக்கு கோவை மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும் இச்செலவினத்தினை இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஓராண்டிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.626<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3904/2023/சி1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 23</u>**<br>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 சாஸ்திரி நகர் பகுதியில் உள்ள பெண்கள் கழிப்பறை மிகவும் மோசமான இடியும் நிலையில் பழுதடைந்து உள்ளது. எனவே பொது மக்களின் அவசர அவசியம் கருதி கழிப்பறையை இடித்து அகற்றவேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3919/2023/இ1) | தீர்மானம் எண்.627<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 24</u>**<br>இந்நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான தணிக்கைக்கு ஆண்டுக் கணக்குகள் (Annual Accounts), இணைப்புகள் (Annexures) மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு ஆகியவை தயார் செய்த வகையில் திருவாளர்.சன் டேட்டா காம் (எ) திருமதி.எஸ்.தாமரைச்செல்வி என்பவருக்கு தொகை ரூ.1.00 இலட்சம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1243/2022/பி1) | தீர்மானம் எண்.628<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 25</u>**<br>2023-2024 ஆம் ஆண்டு மாநில பகிர்வு நிதியில் பள்ளி மேம்பாட்டு திட்டத்தில் பள்ளிக்கட்டிடங்கள் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.25741/2023/SS2, நாள்.26.10.2023-இன்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் கீழ்காணும் விவரப்படி 10 பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதற்கு தொகை ரூ.425.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.629<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சம்) |
|---|---|---|
| 1 | ஆயர்பாடி பகுதியில் உள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 32.00 |
| 2 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிர்புறம் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். (வடக்கு பகுதி) | 32.00 |
| 3 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிர்புறம் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். (தெற்கு பகுதி) | 32.00 |
| 4 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிர்புறம் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். (மேற்கு பகுதி) | 32.00 |
| 5 | குளத்துப்பாளையம் (சாஸ்திரி நகர்) பகுதியில் உள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 32.00 |
| 6 | மங்கலக்கரைப்புதூர் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 32.00 |
| 7 | மங்கலக்கரைப்புதூர் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். (வடக்கு பகுதி) | 32.00 |
| 8 | குட்டையூர் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 67.00 |
| 9 | பெரியதொட்டிபாளையம் பகுதியில் உள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளியில் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 67.00 |
| 10 | திம்மண்ணகவுண்டன்புதூர் பகுதியில் உள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளியில் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 67.00 |
| | **மொத்தம்** | **425.00** |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3341/2023/இ1) | |
| 08.11.2023 | **<u>பொருள்: 26</u>**<br>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 மாதேஸ்வரன் கோவில் ரோட்டில் அமைந்துள்ளது அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.13.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3918/2023/இ1) | தீர்மானம் எண்.630<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 27</u>**<br>காரமடை நகராட்சிக்கு உட்பட்ட 27 வார்டு பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் சரி செய்ய ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1859/2022/இ1) | தீர்மானம் எண்.631<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 08.11.2023 | **<u>பொருள்: 28</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளில் உள்ள 5 HP, 7.5 HP மற்றும் 10 HP மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதினை சரிசெய்யவும் மற்றும் அதற்கு தேவையான உதிரிபாகங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.1859/2022/இ1) | தீர்மானம் எண்.632<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 08.11.2023 | **<u>பொருள்: 29</u>**<br>இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் பணியாற்றி வரும் குடிநீர் பணியாளர்களான சிறுவாணி ஆண்கள் சுய உதவிக்குழு மற்றும் பவானி ஆண்கள் சுய உதவிக்குழு ஆகிய இரண்டு குழுக்களை 01.08.2023 முதல் 28.10.2023 முடிய 89 நாட்களுக்கு தொடர்ந்து குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்காலம் 28.10.2023–ஆம் நாள் முடிவடைவதால் மேற்படி குழுக்கள் மூலம் பணியாளர்களை 29.10.2023 முதல் 25.01.2024 வரை 89 நாட்களுக்கு தொடர்ந்து குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளவும், அவர்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.17.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.2145/2022/எச்1) | தீர்மானம் எண்.633<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

**ஒம்/– உஷா வெங்கடேஷ்**
நகர்மன்ற தலைவர்,
காரமடை நகராட்சி.

# காரமடை நகராட்சி

**2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (16.11.2023) 16–ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விவரம்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | நகர்மன்ற பெருள் வரிசை எண் மற்றும் பொருள் விவரம் | தீர்மானம் எண் / தீர்மான விவரம் |
|---|---|---|
| 16.11.2023 | **பொருள்: 01**<br>காரமடை நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியும் செயல்முறை கடிதம் எண்.33552/2022/EA–2SWM–2, நாள்.10.01.2023–இன்படி திருவாளர்.ஜெயசூர்யா இன்டஸ்ட்ரீஸ், திருப்பூர் என்கிற வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்திற்கு பணி உத்திரவு நாள்.05.05.2023 முதல் வழங்கப்பட்டு 08.05.2023 அன்று பணி துவங்கப்பட்டது. இப்பணியில் வெளிக்கொணர்வு முகமை தூய்மைப் பணியாளர்கள் 72 நபர்கள், தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள் 3 நபர்கள், ஓட்டுநர்கள் 8 நபர்கள் இப்பணிக்கான வாகனங்கள், தளவாடப்பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கவும், அவர்களுக்கான பணி உத்திரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்றைய தேதி 14.11.2023 வரை போதிய அளவில் பணியாளர்கள், வாகனங்கள், தளவாடப் பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்தாரால் வழங்கப்படவில்லை. இதனால் நகரில் பெருமளவில் திடக்கழிவுகள் ஆங்காங்கே தேங்கி பொது மக்கள் மற்றும் பொது சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. இது குறித்து மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமைக்கு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை மற்றும் நேரடி அறிவுரையின்படி அறிவிப்புகள் வழங்கியும் எவ்வித முன்னேற்றமும் பணியில் காண்பிக்கப்படவில்லை. | தீர்மானம் எண்.634 தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இதில் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியான குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என சேகரமாகும் மையத்திற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் குப்பைகளை தரம் பிரித்தும் மற்றும் வார்டுகளில் குப்பைகள் தேங்கா வண்ணமும் பணி மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து பல புகார்கள் வந்த வண்ணமாகவே உள்ளது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பலமுறை நேரிலும் இருமுறை எழுத்து பூர்வமாக அறிவிப்புகள் வழங்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை பணியில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. மேலும் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு நாளது வரை சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை. மேலும் குப்பைகளை தரம் பிரிக்காமல் உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ளது. இவர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினை திறம்பட செய்யாததால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட ஏதுவாகிறது.<br>காரமடை நகராட்சி கோவை–மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ளது. மேலும் இந்நகராட்சியில் புகழ்பெற்ற அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளதால் முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்கின்ற நகரமாகும். எனவே நகரின் பொது சுகாதார நலன் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் நகரின் வணிக மேம்பாடு நோக்கத்திற்காகவும் தூய்மைப் பணிகளை சீரிய அளவில் தினமும் தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேற்படி வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்கள் அளித்தும் தூய்மைப் பணிகளில் முன்னேற்றம் அடையாமல் தற்போது மிகவும் சீர்கெட்டுள்ளது.<br>எனவே இவர்களது ஒப்பந்தத்தை இரத்து செய்யவும், மேலும் இரத்து செய்யப்பட்ட நாளிலிருந்து பொது சுகாதாரப் பணி பாதிப்படையா வண்ணம் பணியினை மேற்கொள்ளவும் ஏற்கனவே காரமடை நகராட்சியில் பணிபுரிந்த சுய உதவிக்குழுக்கள் மூலமாக தற்காலிகமாக இப்பணியினை மேற்கொள்ளவும் 27 வார்டுகளில் ஒப்பந்த பணியின் போது வழங்கப்பட்ட ஊதிய விகிதத்திலேயே தூய்மைப் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினத்தையும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை பணியினை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1648/2022/எச்1) | |
| 16.11.2023 | **<u>பொருள்: 02</u>**<br>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – 2022–23ல் இரண்டு எண்ணிக்கை நுண்உரக்குடில் மையம் (MCC) மற்றும் ஒரு எண்ணிக்கை தரம் பிரித்து கையாளும் மையம் (MRF) கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் மதிப்பீட்டில் இல்லாத கீழ்கண்ட பணிகள்<br>1) மின் இணைப்பு மற்றும் ஒயரிங் பணிகள்.<br>2) தரைத்தளத்திற்கு டைல்ஸ் பதிக்கும் பணிகள்.<br>3) கதவு மற்றும் ஜன்னல்கள் பொருத்தும் பணிகள்.<br>4) பைப் மற்றும் ரோலிங் சட்டர் பொருத்தும் பணிகள்.<br>மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1802/2022/எச்1) | தீர்மானம் எண்.635<br>ஒத்திவைக்கப்பட்டது. |

**ஒம்/– உஷா வெங்கடேஷ்**
நகர்மன்ற தலைவர்,
காரமடை நகராட்சி.